இது காதல் கவிதையாக இருக்குமோ?
----------------------------------------------------------------------
உன் பெயரை யாராவது சொல்லும்போது
என்னை யாரோ கூப்பிடுவது போல் இருக்கிறது.
உன்னோடு பேசும்போது
எனக்குள் நானே பேசிக் கொள்வது போல்
ஒரு தனிமையைத் தருகிறது.
உன் முகத்தை நான்
மௌனமாய் பார்த்துக் கொண்டிருக்கையில்
வெளியே சொல்லத் தயங்குகிற
ஒரு பகல் கனவைக் கலைக்காமல்
தொடர்வதுபோல் இருக்கிறது.
என்னைப் பற்றிய உண்மைகளை
உன்னிடம் சொல்கிறபோது
உடை களைந்து என்னை நானே
கண்ணாடியில் பார்ப்பதாய்த் தோன்றுகிறது.
உன்னிடமிருந்து நான் பிரிந்து செல்லும்போது
என்னை யாரோ ரகசியமாய்ப்
பின் தொடர்வதுபோல் இருக்கிறது.
இந்த வரிகளை எழுதும்போது
இது யாரையோ குறித்து நான் எழுதும்
ஒரு காதல் கவிதையாக இருக்குமோ
என்று ஒரு சந்தேகம் வருகிறது.
--12-12 -2019
ஓவியம் ஆண்டீனா வெர்பூம்

